டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் வெல்லர்ஸ்

agridoctor.in | 11.11.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 120 | Madurai | Online Edition

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

# வெண்டைக்காய் அறுவடைக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு!



கோயம்புத்தூர், நவ.10

வெண்டைக்காய் உற்பத்தியில் இந்தியா முதன்மையான நாடாக உள்ளது, இதன் சாகுபடி முக்கிய வேளாண் மண்டலங் களில் பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. மத்திய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் இரண்டாவது முன் மதிப்பீடுகளின்படி (2025-26), சுமார் 5.75 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் வெண்டை சாகுபடி செய்யப்பட்டு, இதன் மூலம் ஆண்டுக்கு சுமார் 79.34 லட்சம் டன்கள் விளைச்சல் எட்டப் பட்டுள்ளது. குஜராத், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் தேசிய அளவில் அதிக உற்பத்தியைக் கொண்டிருந்தாலும், தமிழ்நாடும் ஒரு முக்கிய உற்பத்தி மையமாகவும், அதிக நுகர்வு கொண்ட மாநிலமாகவும் திகழ்கிறது. தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் வெண்டை சாகுபடி செய்யும் முக்கிய மாவட்டங் களாகும். இந்தப் பயிர் முக்கியமாக ஆடிப் பட்டம் மற்றும் தை பட்டம் ஆகிய இரு பருவங்களில் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் வெண்டை சாகுபடி 0.20 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டு இதன் மூலம் மொத்தம் 2.29 லட்சம் டன்கள் விளைச்சல் எட்டப்பட்டுள்ளது. நுகர்வோர் அடர் பச்சை நிறத்தில், பளபளப்பான தோற்றம் கொண்ட வெண்டைக் காய்களையே விரும்புவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

தற்போது, திப்பம்பட்டி, அத்திகொம்பு, பார்ச்சலூர், அம்பிலிக்கை, மணப்பாறை, ஒட்டன்சத்திரம், கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் போன்ற உள்ளூர் உற்பத்திச் சந்தை களிலிருந்து புதிய விளைச்சல் மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய மொத்த விற்பனைச் சந்தைகளுக்கும், உழவர் சந்தை களுக்கும் வந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கும், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவு பிரிவு, ஒட்டன்சத்திரம் சந்தைகளில் கடந்த 15 ஆண்டுகளில் நிலவிய வெண்டைக்காய் விலைகளை ஆய்வு செய்தது. மேலும், இது குறித்து வர்த்தகர்களிடம் விரிவான ஆய்வையும் மேற்கொண்டது. பொருளாதார காலத்தொடர் பகுப்பாய்வு மற்றும் தற்போதைய சந்தை வரத்து ஆகியவற்றின் அடிப்படையில், அறுவடை காலத்தில் தரமான வெண்டைக் காயின் பண்ணை விலை கிலோவுக்கு சுமார் 25 ரூபாய் வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், அறுவடை காலத்தில் மழை பெய்தாலோ அல்லது பிற மாநிலங்களிலிருந்து வெண்டைக்காய் வரத்து அதிகரித்தாலோ, அது உள்ளூர் சந்தை விலையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்வது குறித்து அதற்கேற்ப திட்டமிட்டு முடிவெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்குத் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு. வேளாண் பொருளியல் துறை, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டுஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003, தொலைபேசி : 0422-2431405, மின்னஞ்சல் : tndemic@gmail.com தொடர்பு கொள்ளலாம்.



# வேளாண்மையில் ட்ரோன்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி!

மயிலாடுதுறை, நவ.10

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் வட்டாரம், நரசிங்கநத்தம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மையில் ட்ரோன்களின் பயன்பாடு குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.



இப்பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) செல்வராஜ் கலந்து கொண்டு தலைமை தாங்கி, நவீன வேளாண்மையில் ட்ரோன்களின் முக்கியத்துவம், பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் திரவ உரங்களை தெளிப்பதில் ட்ரோன்களின் பயன்பாடு, குறைந்த நேரத்தில் அதிக பரப்பளவில் தெளிக்கும் தொழில்நுட்பம், ஆள்பற்றாக்குறையை சமாளித்தல் மற்றும் சாகுபடி செலவைக் குறைப்பதில் ட்ரோன்களின் பங்கு ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து நில உடமை பதிவு அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளிடம் கூறினார். அதனைத் தொடர்ந்து, வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில் குமார் வேளாண்மைத் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு நலத் திட்டங்கள், மானியத் திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்கான பயன்கள் குறித்து எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் உமா பசுபதி, உயிர் உரங்கள் மற்றும் பயிர் நுண்ணூட்டங்களின் முக்கியத்துவம், அவற்றின் பயன்பாடுகள் மற்றும் பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிப்பதில் அவற்றின் பங்கு குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கினார்.

இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் தியாகு வரவேற்புரை ஆற்றினார். உதவி வேளாண்மை அலுவலர் வேதராஜன் பயிற்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார். பயிற்சியின் நிறைவில் உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வக் குமரன் நன்றியுரை வழங்கினார்.

இப்பயிற்சியில் விவசாயிகள் கலந்து கொண்டு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் ட்ரோன்களின் பயன்பாடு குறித்து பயனுள்ள தகவல்களை அறிந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும்
தள்ளுபடி உண்டு
உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல்
நகை எடுக்க வரும்போது
அக்ரி டாக்டர் வாசகர்
என்று அறிமுகப் படுத்திக்
கொண்டு சிறப்பான
சேவையையும், பிரத்யேக
தள்ளுபடியும் பெறுங்கள்.
இந்த தள்ளுபடி உங்களுக்கு
மட்டுமே அதுவும் எல்லா
நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும்
நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை
எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.
96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வணிகமுறையிலான காய்கறி மற்றும் பழப்பொருட்கள் தயாரித்தல் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.10

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வணிகமுறையிலான காய்கறி மற்றும் பழப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி 12.11.26 மற்றும் 13.11.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழி) நடைபெறும்.

கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவையாவன

- உலர வைக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள் (Dehydrated vegetables and fruits)
- பல வகை பழ ஜாம் (Mixed fruit jam)
- பழரசம் (Squash)
- தயார் நிலைபானம் (Ready - to - serve beverage)
- ஊறுகாய் (Pickles)
- ஊறுகனி (Candy)
- பழப்பார் (Fruit bar)

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 ரூ முளுகூ 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# ஏற்காடு அரசு தொடக்கப்பள்ளியில் காய்கறித் தோட்டம் அமைக்கும் நிகழ்ச்சி!



சேலம், நவ.10

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள், தங்களது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, பள்ளி மாணவர்களுடன் இணைந்து காய்கறித் தோட்டம் அமைக்கும் நிகழ்ச்சியை மேற்கொண்டனர்.

பள்ளி மாணவர்களிடையே வேளாண்மை மற்றும் ஊட்டச்சத்து உணவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும். இதன் ஒரு பகுதியாக, பள்ளி வளாகத்தில் காய்கறிகளைப் பயிரிடுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, நிலம் தயார்படுத்தப்பட்டு காய்கறித் தோட்டம் அமைக்கப்பட்டது.

மேலும், காய்கறி விதைப்பு முறைகள், நீர்ப்பாசன மேலாண்மை, இயற்கை உரங்களின் பயன்பாடு மற்றும் பயிர்களின் முறையான பராமரிப்பு குறித்து பள்ளி மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இத்தகைய காய்கறித் தோட்டங்கள் மூலம் பள்ளி மாணவர் களுக்குச் செய்முறை வேளாண் அனுபவத்தை வழங்குவதுடன், வீட்டுத் தோட்டம் அமைக்கும் ஆர்வத்தையும் ஊக்குவிக்க முடியும்.

ராவே மாணவர்களின் இம்முயற்சி, பள்ளி மாணவர் களிடையே வேளாண்மை மீதான ஆர்வத்தையும், இயற்கை உணவு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப் புணர்வையும் மேம்படுத்தும் வகையில் அமைந்தது.

# நெற் பயிரில் இலைச்சுருட்டுப்புழு மேலாண்மை



கடலூர், நவ.10

கடலூர் மாவட்டத்தில் தற்பொழுது நிலவி வரும் வானிலையின் காரணமாக நெற் பயிரில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. இதன் அறிகுறிகள் இலைகள் நீள வாக்கில் மடிக்கப்பட்டிருக்கும். புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்து விடும். தீவிர தாக்குதலின் போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காய்ந்தது போல காட்சியளிக்கும். இலைகள் நீள்வாட்டில் சுருண்டு புழுக்கள் அதனுள்ளே இருந்துவிடும். இலை சுருட்டுப் புழுவின் அந்துப் பூச்சியானது மஞ்சளான பழுப்பு நிற இறக்கைகளுடன் காணப்படும். அவற்றின் முன் பின் இறக்கைகளில் அடர்ந்த நிறத்துடன் அலை அலையாய் கோடுகள் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

தேவைக்கு அதிகமாக தழைச்சத்து இடுவதைத் தவிர்க்கவும். வயல் வரப்புகளைச் சுத்தமாகவும் வயலில் களைகள் இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்துப்பூச்சியைக் கட்டுப்படுத்த இனக் கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 5 என்ற அளவில் பயன்படுத்தலாம் அல்லது விளக்குப் பொறிகளை இரவு நேரங்களில் 2 ஏக்கருக்கு ஒன்று என்கிற அளவில் வைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

இதை கட்டுபடுத்த ஏக்கருக்கு கார்போசல்பான் 400 மி.லி அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி அல்லது குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% (60 மிலி) அல்லது @ புளுபெண்டிமைடு 39.35 SC (20 கிராம்) என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும். எனவே விவசாயிகள் உரியபாதுகாப்பு முறைகளைக் கையாண்டு தங்கள் நெற் பயிரை காத்திட வேண்டும் என வேளாண் அறிவியல் நிலையம், விருத்தாசலம் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# கற்றலில் தொடங்கி... தொழில்முனைவில் மலரும் வேளாண் பயணம்!



கடலூர் மாவட்டம், சிதம்பரம், அண்ணாமலை நகர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த இளங்கலை இறுதியாண்டு மாணவர்கள், பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக அனுபவவழிக் கல்வித் திட்டத்தின் (Experiential Learning Programme) கீழ், பூச்சியியல் துறையில் ELENT 401–Commercial Beekeeping மற்றும் ELENT 402–Commercial Sericulture ஆகிய இரண்டு பாடப் பிரிவுகளின் வாயிலாகப் பல்வேறு நடைமுறைப் பயிற்சிகளைப் பெற்றனர்.

இப்பயிற்சியில் 50 மாணவர்கள் பங்கேற்று, வணிகரீதியிலான தேனீ வளர்ப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு தொடர்பான பல்வேறு தொழில்நுட்பங்கள், உற்பத்தி முறைகள் மற்றும் நடைமுறைச் செயல்பாடுகள் குறித்த அனுபவ அறிவைப் பெற்றனர். இப்பயிற்சியானது முனைவர் V.செல்வநாராயணன், பேராசிரியர் மற்றும் துறை தலைவர், பூச்சியியல் துறை, முனைவர் R. கனகராஜன், இணைப்பேராசிரியர், மற்றும் முனைவர் T. செல்வமுத்துக்குமரன், இணைப்பேராசிரியர் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் சிறப்பாக நடைபெற்றது.

**தேனீ வளர்ப்பும் திகட்டாத லாபமும்**

**i. மலர் வளத்தோட்டம் அமைத்தல் (Establishment of Bee Flora)**

தேனீக்களின் உணவு சேகரிக்கும் நடத்தை (Foraging Behaviour) மற்றும் மலர் வளத் தேவைகளைக் கருத்தில் கொண்டு நிலம் தயார் செய்யப்பட்டு, முருங்கை, சூரியகாந்தி, வாழை, கொய்யா, மக்காச் சோளம், சாமந்தி, ரோஜா, சம்பங்கி உள்ளிட்ட பயிர்கள் மற்றும் நாவல், பாதாம், புங்கம் போன்ற மரக்கன்றுகள் விதைக்கப்பட்டன.

**ii. இந்தியத் தேனீக்கள் வளர்ப்பு மற்றும் கையாளுதல் (Indian Honey Bee Rearing and Handling)**

இந்தியத் தேனீக்களை (Indian Honey Bees) அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் கூட்ட அமைப்பு, செயல்பாடுகள் மற்றும் உணவு சேகரிக்கும் முறைகள் குறித்து அறிந்து கொண்டதுடன், தேனீக் கூட்டங்களை கையாளுதல், பராமரித்தல் மற்றும் வளர்த்தல்

தொடர்பான நடைமுறைப் பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

**iii. மதிப்புக் கூட்டப்பட்ட தேன் பொருட்கள் (Value-added Honey Products)**



தேனை அடிப்படையாகக் கொண்டு அத்திப்பழம், நெல்லிக்காய், பேரீச்சம்பழம், இஞ்சி, பூண்டு மற்றும் கிவிபழம் ஆகியவற்றுடன் இணைத்து ஆறு வகையானமதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கப்பட்டன. இப்பொருட்கள் மூலம் தேனின் மதிப்புக்கூட்டல் மற்றும் புதிய சந்தை வாய்ப்புகள் குறித்து மாணவர்கள் நடைமுறை அனுபவம் பெற்றனர்.

**சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை (Marketing and Sales)**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் புல முதல்வர் முனைவர் K.ஹரிப்பிரியா, தலைமைச் செயல் அலுவலராக (Chief Executive Officer) செயல்பட, பூச்சியியல் துறைத்தலைவர் முனைவர் V.செல்வநாராயணன் நிர்வாக இயக்குநராகவும் (Managing Director), இணைப்பேராசிரியர் முனைவர் R.கனகராஜன் மேலாளராகவும் (Manager) வழிகாட்டினர். மாணவர் பிரதிநிதிகளாக நால்வர் துணை மேலாளர்களாக (Deputy Managers) S.ரஞ்சனி, S.ராஜ்குமார், V.ஸ்ரீவிஷ்ணுபிரசாத் மற்றும் T.சந்தியா செயல்பட்டு, Lakeview Garden வளாகத்தில் வேளாண் புலதின் சார்பில் விற்பனை அரங்கு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது.

**ELENT 402 வணிகரீதியான பட்டுப்புழு வளர்ப்பு**

பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சியின் ஒரு பகுதியாக, மாணவர்கள் மல்பெரி அல்லாத பட்டுப்புழு வளர்ப்பில் (Non-Mulberry Sericulture) ஈடுபட்டனர். குறிப்பாக, ஆமணக்கு இலைகளை உணவாகக் கொண்டு வளரும் எரிப் பட்டுப்புழு (Samia ricini) வளர்க்கப்பட்டது. பட்டுப் புழுக்களுக்குத் தேவையான இலைகள் தொடர்ந்து வழங்கப் பட்டு, அவற்றின் வளர்ச்சி நிலைகள் நேரடியாகக் கண்காணிக்கப் பட்டன.

**எரிப் பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி**

**முட்டைப் பருவம் :** சுமார் 8–9 நாட்களில் முட்டைகள் பொரித்து இளம்புழுக்கள் வெளிவருகின்றன.

**இளம் புழுப்பருவம் :** ஐந்து வளர்ச்சி நிலைகளைக் கடந்து சுமார் 20–23 நாட்களில் முழு வளர்ச்சியை அடைகின்றன. இப்பருவத்தில் தான் புழுக்களின் உணவுத் தேவை அதிகமாக இருக்கும். எனவே, ஆமணக்கு இலைகள் தொடர்ந்து உணவாக வழங்கப்பட்டன.



**கூடு கட்டுதல் :** முழு வளர்ச்சியடைந்த புழுக்கள் தங்களைச் சுற்றிப் பட்டுக் கூடுகளை உருவாக்கிக் கொள்கின்றன.

**கூட்டுப் புழுப்பருவம் :** பட்டுக் கூட்டிற்குள் புழு கூட்டுப்புழுவாக மாறி, பின்னர் வளர்ந்த அந்துப்பூச்சியாக வெளிவருகிறது.

எரி பட்டுப்புழுவிலிருந்து தயாரிக்கப்படும் பட்டு 'அகிம்சை பட்டு' என்று அழைக்கப்படுகிறது. இந்த பட்டுப்புழுக்களை மாணவர்கள் வெற்றிகரமாக வளர்த்தெடுத்துள்ளனர்.

**ii. உணவுத் தாவரங்களின் வளர்ப்பு மற்றும் நடவு**

பட்டுப்புழு வளர்ப்பிற்குத் தேவையான உணவு வளத்தை உறுதி செய்யும் வகையில் மல்பெரி (Mulberry) மற்றும் மரவள்ளிக்கிழங்கு (Tapioca) செடிகளின் குச்சிகள் நடவு செய்யப்பட்டன. மல்பெரி இலைகள் Bombyx mori எனும் மல்பெரிப் பட்டுப்புழுவிற்கும், மரவள்ளி இலைகள் ஈரிப்பட்டுப்புழுவிற்கு மாற்று உணவாகவும் பயன்படுகின்றன. இதன் மூலம் பட்டுப்புழு வளர்ப்பிற்குத் தேவையான உணவுத் தாவரங்களை நாமே உற்பத்தி செய்வதன் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

**iii. பட்டுக்கூடுகளின் எடை மற்றும் தர மதிப்பீடு**

உருவான பட்டுக்கூடுகள் சேகரிக்கப்பட்டு அவற்றின் மொத்த எடை அளவிடப்பட்டது. பின்னர் பட்டுக்கூடுகளைத் திறந்து கூட்டுப் புழு (Pupa) மற்றும் பட்டுக்கூடு ஓடு (Cocoon Shell) ஆகியவை தனித் தனியாகப் பிரித்து எடை கணக்கிடப்பட்டன. இதன் அடிப்படையில் பட்டுக்கூட்டின் ஓடுவிகிதம் (Shell Ratio %) மற்றும் வளர்ப்பின் பயன் திறன் விகிதம் (Effective Rate of Rearing – ERR %) ஆகியவை கணக்கிடப்பட்டன.



தேனீ வளர்ப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு போன்ற உப தொழில்கள், குறைந்த நிலப்பரப்பில் அதிக வருமானம் ஈட்ட உதவும் சிறந்த வாய்ப்புகளாகும். குறிப்பாக, குறைந்த நில வசதி கொண்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இத்தொழில்கள் மிகவும் பயனுள்ளதாக அமைகின்றன. இவற்றை முறையாக மேற்கொள் வதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற்று தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இந்த செயல்பாட்டிற்கு தேவையான வழிகாட்டுதலையும் தொழில் நுட்ப ஆதரவையும் வழங்கிய பூச்சியியல் துறையைச் சேர்ந்த ஆய்வு

மாணவர்கள் சி. மணிகண்டன் மற்றும் கிருத்திகா ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

விதைத்த அறிவு அனுபவமாக மலர்ந்து, உழைப்பின் மூலம் வெற்றியாக அறுவடை செய்யப்படுகிறது. தேனீக்களின் ஒற்றுமை யையும், பட்டுப்புழுக்களின் பொறுமையையும் கற்றுக் கொண்ட இளம் வேளாண் மாணவர்களின் பயணம், நாளைய தன்னிறைவு பெற்ற விவசாயத்திற்கான நம்பிக்கை விதையாக அமையட்டும்!

தகவல் : ***S.ராஜ்குமார், IV இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.***



# பயன் தரும் பனையின் பயன்கள் ஏராளம்? எப்படி?



பனை மரம் தமிழ்நாட்டின் மாநில மரமாகும். இது கற்பக விருட்சம் என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் பனை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் ஏதாவது ஒரு வகையில் மனிதர்களுக்கு பயன் படுகிறது. பனை மரம் உண்மையில் மரமல்ல. அது புல்லினத்தை சார்ந்த தாவரமாகும் என்கிறது தொல்காப்பியம். பனை மரங்கள் அடர்வனத்தில் இருப் பதை விட மனிதர்கள் வாழும் பகுதியி லேயே இருக்கும். சாரசரியாக 36 மீட்டர் முதல் 42 மீட்டர் உயரமுடையது. வறட்சியை தாங்கி எல்லாவிதமான மண் கண்டத்தில் வளரும். மண்ணில் ஆணிவேர்த் தொகுப்பு இல்லாமல் சல்லி வேர் தொகுப்பு 60 அடி முதல் 100 அடி வரை ஆழத்தில் செல்லுவதால் மண் அரிமானத்தை தடுக்க உதவும்.

**பனையிலிருந்து கிடைக்கும் பொருட்கள்?**

நுங்கு, பதநீர், பனஞ்சாறு, பனங்கிழங்கு, பனம் பழம் போன்ற பொருட்கள் பனையிலிருந்து கிடைக்க கூடியது. இதிலிருந்து மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக கருப்பட்டி, வெல்லம், பனஞ்சீனி, பனங் கற்கண்டு, ஓடியல் புட்டு, ஓடியல் கூழ் உள்ளிட்ட உணவுப் பொருட்களைத் தயாரிக்க முடியும். கோடைகாலத்தில் உடலின் மீது நுங்கு வைத்து தடவுவதால் வியர்குரு பாதிப்பை தடுக்கும். உடல் சூட்டைத் தணிக்கும் குடல், வயிற்றுப் புண்களைக் குணப் படுத்தவும் பதநீர் பயன்படுத்த படுகிறது.

**பனை ஓலை?**

பனை ஓலையின் ஆயுட்காலம் சுமார் 400 ஆண்டுகள் என்பதால் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் இன்னும் பொக்கிஷங் களாக நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பண்டைய காலத்தில் கிராமப்புறங்களை பனை ஓலையைக் கொண்டு, கூரைவேயவும், வீடுகள் கட்டவும் பனைமரங்கள் பேருதவியாக இருந்தன. பனை ஓலையிலிருந்து தட்டிகள், பின்னல், அலங்கார பொருட்கள், பனை ஓலை முறம், கூடை உள்ளிட்ட வீட்டு உபயோக பொருட்கள் தயாரிக்கப்படுகிறது.

**பனையை பயன்படுத்திய சங்க கால மன்னர்கள்?**

முவேந்தர்களில் ஒருவரான சேர மன்னர்கள் பனம் பூ மாலையை அரசரின் அடையாளமாக அணிந்தனர். வள்ளல் பாரி பனை தன்னுடைய சின்னமாக வைத்திருந்ததாக தரவுகள் உள்ளன.

**பனையின் இலக்கிய பெயர்கள் தெரியுமா?**

புற்றாளி, புற்பதி, போந்து, பெண்னை, தாளி, கரும்புறம், காமம், தாலம், ஓடகம், போன்ற பெயர்கள் சங்க இலக்கியங்களில் பனையின் பெயர்களாக வழங்கப்பட்டுள்ளன.

**பனையிலிருந்து கிராமப்புற சிறுவர் விளையாடும் விளையாட்டு பொருட்கள் என்ன?..**

பனையோலைக் காத்தாடி, பனை ஓலை மட்டையில் அமர்ந்து இழுப்பது, பனங்காய் தள்ளுவண்டி போன்ற விளையாட்டு பொருட்கள் கிராமப்புறத்தில் அதிகமாக பயன்படுத்தப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக இந்த விளையாட்டு குறைந்த விட்டது.

**பனையும் ஆன்மீகமும்.?**

பனை ஓலைகளை கொண்டு கார்த்திகை தீப நாளில் சொக்கப் பனை எரிக்க பயன்படுத்தப்படுகிறது. தைப் பொங்கல் நாளில் பொங்கல் பனையில் சோற்றை கிளறிட பனைமட்டை துடுப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

**பனையை பற்றி பழமொழி மற்றும் சொலவடைகள் தெரியுமா?**

1) பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது

2) காய்ந்த ஓலைப்பார்த்து பச்சை யோலைச் சிரித்ததாம்.

3) ஆயிரம் தென்னை சாய்ந்தாலும் ஒரு பனை சாய ஒரு வாரம் புயல் அடிக்கனுமாம்.

4) 10 பனை மரங்கள் இருக்கும் இடத்தில கிணற்று நீர் வற்றாது.

5) பனைக்குப் பத்தடி

இதுபோன்ற பழமொழிகளும் சொலவடைகளும் உள்ளன.

பனையை நடுவோம், பாரம்பரியத்தை பாதுகாப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நத்தநல்லூர் கிராமத்தில் 1000-க்கும் மேற்பட்ட பனை விதைகள் நடும் பணியில் வேளாண் கல்லூரி மாணவர்கள்



காஞ்சிபுரம், நவ.10

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், நத்தநல்லூர் கிராமத்தில், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், டான் போஸ்கோ வேளாண்மைக் கல்லூரி (Don Bosco College of Agriculture), சகாயத்தோட்டம் மாணவர்கள், விதைகள் தன்னார்வு அமைப்பு (VIDHAIGAL THANNARVU AMAIPPU NGO) சார்பில் 1000-க்கும் மேற்பட்ட பனை விதைகள் நடும் பணியில் ஈடுபட்டனர்.

NGO இணைப்புப் பணியின் இரண்டாம் நாள் நிகழ்வாக நடைபெற்ற இப்பணியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் பனை விதைகள் நடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் NGO செயலாளர் பசுமை சரணின் (Pasumai Saran) வழிகாட்டுதலின் கீழ், வேளாண் மாணவர்களான சருகேஷ், சஞ்சீவி, சஞ்சய், சர்வேஷ், ருதிரன், ரமணா, சத்யஜித், ரஞ்சித் குமார், சாம்சன் மற்றும் ரெம்மஸ் ஆன்டோ ஆகியோர் ஆர்வத்துடன் பங்கேற்று பனை விதைகள் நடும் பணியை மேற்கொண்டனர்.

பனை மரங்களின் முக்கியத்துவம், நிலத்தடி நீர் பாதுகாப்பு, மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

1000-க்கும் மேற்பட்ட பனை விதைகளை நடும் இம்முயற்சி, பசுமையான சூழலை உருவாக்குவதற்கும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கும் ஒரு சிறந்த சமூகப் பங்களிப்பாக அமைந்தது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நவீன வேளாண்மையில் அதலைக்காய் சாகுபடி



விருதுநகர் மாவட்டம், காரியபட்டிக்கு அருகில் உள்ள பாம்பாட்டி எனும் கிராமத்தில் வசிக்கும் சரவணக்குமார் எனும் இளைஞர் இவ்வகை அரிய பயிரான அதலைக்காய் சாகுபடி செய்தும் விதை கிழங்குகளைச் சேகரித்தும் வருகிறார் எனும் செய்தி கிடைத்ததும், அவருடன் உரையாடினோம். அதலைக்காய் குறித்த அற்புதமான விபரங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டார்.

நமது முன்னோர்கள் ஆரோக்கியமாக வாழ்ந்ததற்கான முக்கியக் காரணம் அவர்களது உணவு முறையும் உடலுழைப்பும், நாம் இப்போது முப்பது வயதுகளிலேயே சர்க்கரை நோய் மாரமடைப்பு போன்ற நோய்களுக்கு ஆளாவதற்கு முக்கியமான காரணம். நமது தவறான உணவுப் பழக்கமும் குறைந்தபட்ச உடல் உழைப்பு இல்லாமையும் தான். இயற்கை நமக்கு எண்ணற்ற கொடை களைத் தந்திருக்கின்றது. அதனை நம் முன்னோர்கள் மதித்துச் செயல்பட்டதால் தான் அவர்களால் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடிந்தது. இயற்கையை மதிக்காததன் விளைவாக இன்று நம் வருவாயில் பெரும்பகுதி மருத்துவச் செலவிற்கே செல்கின்றது.

அதலைக்காய் இந்தியாவில் மட்டுமே கிடைக்கக்கூடிய, நம்மில் பலரும் கேள்விப்பட்டிருக்காத கொடிவகைத் தாவரமாகும். இதன் சாகுபடி முறையைப் பற்றித் தெரிந்து கொள்ளும் முன்னர் இதன் மருத்துவப் பயன்களைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ளலாம்.

இந்த ஒரு காய் நம்மை சர்க்கரை நோய், மஞ்சள் காமாலை, புற்றுநோய் போன்று பல்வேறு நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாக்கின்றது.

அதலைக்காயின் சதைப்பகுதி இன்சுலின் போல செயல்படக் கூடியது. இன்சுலின் நமது உடலின் இரத்தத்தில் உள்ள சர்க் கரையின் அளவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள உதவும். மேலும் சர்க்கரையின் அளவைக் குறைக்கும் மருத்துவக் குணம் உள்ள காய் என்பதால், சர்க்கரை நோயாளிகளுக்க இயற்கை கொடுத்த வரமாகும்.

இந்தக் காயில் உள்ள சத்துகள் புற்றுநோய் செல்கள் இரத்தத்தில் வளர்வதற்கான ஆற்றல்களைத் தடுக்கிறது. முக்கியமாக இது கணையத்தைப் பாதுகாப்பதால் இதனைத் தொடர்ந்து உண்பவர்

களுக்கு கணையப் புற்றுநோய் வர வாய்ப்புகள் மிகக் குறைவு. அத்துடன் இதில் உள்ள வெய்ச்சின் நமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுவதோடு, புற்றுநோய் செல்கள் பாதிப்பதையும் தடுக்கிறது. சிறுநீரகப் பாதிப்பு என்பது வயது வித்தியாசமின்றி அனை வரையும் பாதிக்கக்கூடியது. இதனைத் தொடர்ந்து உணவில் சேர்த்து வந்தால் சிறுநீரகக் கற்கள் கொஞ்சம் கொஞ்சமாக கரையத் துவங்கும். இரத்தத்தைச் சுத்தரிக்க அதலைக்காயில் உள்ள பைடோநியூட்ரின் உதவி செய்கின்றது.

மஞ்சள் காமாலை என்பது பாகுபாடின்றி அனைவரையும் தாக்கக்கூடிய நோய், அதலைக்காயில் உள்ள ஆல்பமின் மஞ்சல் காமாலையை விரைவில் குணப்படுத்த உதவுகின்றது. நமது உணவில் தினமும் சேர்த்து வந்தால் மஞ்சள் காமாலை தானாக குணமாவதை உணரலாம். வளரிளம் பருவ இளைய தலைமுறையின் முக்கியக் கவலைகளில் ஒன்று முகப்பருவக்கள்.

முகத்தின் அழகை, தோற்றப்பொலிவைக் கெடுக்கும் முகப் பருக்களைச் சரிசெய்ய தோல் நோய் மருத்துவர்களிடமும் அழகுக் கலை நிபுணர்களிடமும் ஆயிரக்கணக்கில் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை. பல்வேறு செற்கை மருந்துகளும் வாங்க வேண்டிய நிலை. ஆனால், இயற்கை இப்பிரச்னைக்கு எளிய தீர்வைக் கொடுத்துள்ளது. அதலைக்காயில் உள்ள வைட்டமின் ஏ, வைட்டமின் சி மற்றும் அமினோ அமிலங்கள் முகப்பருக்களை சரி செய்வதோடு முகப்பருக்கள் வராமலும் தடுக்கிறது. மற்ற காய்கறி களைவிட அதலைக்காயில் அதிக அளவு நார்ச்சத்து உள்ளது. நம் உடல் ஆரோக்கியமாக இருக்க நார்ச்சத்துகள் அவசியம். இது நமது இரத்த ஓட்டத்தை ஊக்குவிப்பதோடு செரிமான மண்டலத்தையும் பாதுகாக்கிறது. மேலும் இதில் பொட்டாசியம், மோமோர்டியல் அமிலம், கரோட்டின் போன்ற ஊட்டச்சத்துக்களும் உள்ளன. இதிலுள்ள அதிக அளவு நார்ச்சத்துகள் பசியுணர்வைக் கட்டுப் படுத்தும். எனவே, இதனைச் சிறிதளவு சாப்பிட்டாலே பசி அடங் கியது போன்ற உணர்வு ஏற்படும். நாம் அடுத்து அதிக உணவு சாப்பிடுவதைத் தடுக்கும். அதுமட்டுமல்லாது அதலைக்காயில் மிகக் குறைவான அளவே கலோரிகள் உள்ளது. ஒரு கப் அதலைக் காயில் 16 கலோரிகள் மட்டுமே இருக்கும். அதனால் உடல் எடையைக் குறைக்க விரும்புவோர் அதலைக்காயை உணவில் அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அதலைக்காய் பொதுவாக இயற்கையாக கரிசல் மண் பகுதிகளில் தானாக முளைத்து வருகின்ற பயிர். அதன் காய்களை சேகரித்து விற்பனை செய்கின்றனர். இதன் மருத்துவக் குணநலன்களை நன்கு அறிந்த மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அதலைக்காயின் தேவையும் அதிகமாகிறது. அதனால் இதனை

சாகுபடி செய்யத் துவக்கிவிட்டனர். அதலைக்காய் கொடி காய்ந்ததும் அதன் வேர்ப்பகுதியில் கிழங்கு காணப்படும். இந்தக் கிழங்குகளைச் சேகரித்து, சேமித்து வைத்தால் அதனை விதைப்பொருளாகக் கொண்டு நமக்குத் தேவைப்பட்ட இடத்தில் கொடிகளை உற்பத்தி செய்து கொள்ளலாம். அதலைக்காய் பழமான பின் கிடைக்கும் விதைகளில் இருந்தும் சாகுபடி செய்யலாம். பொதுவாக கிழங்கு களில் இருந்து வளர்த்து சாகுபடி செய்வதே எளிதான, சிறந்த சாகுபடி முறையாகக் கருதப்படுகின்றது.

தகவல் சேகரிப்பு : ***T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், உடுமலைப்பேட்டை.***

தொடர்புக்கு : சரவணக்குமார் – 99949 64714.



# ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வேளாண் கல்லூரி மாணவிகள் கள ஆய்வு!



திருச்சி, நவ.10

திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் RAWE திட்டத்தின் கீழ் இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் கள ஆய்வு மேற் கொண்டனர். அப்போது அங்கு பணியாற்றும் மேற்பார்வையாளர் செல்வம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் செயல்பாடுகள் மற்றும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் சந்தை வசதிகள் குறித்து மாணவிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

இதில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பெயர், முக்கியமாக விற்பனைக்கு வரும் வேளாண் பயிர்கள் மற்றும் விளைபொருட்கள், பதிவு செய்துள்ள விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் எண்ணிக்கை, ஏல முறைகள், எடை போடும் முறைகள், சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவு, சந்தை விலை நிர்ணயம் போன்ற பல்வேறு விவரங்களை மாணவிகள் அறிந்துகொண்டனர்.

மேலும், மின்னணு தேசிய வேளாண் சந்தை (e-NAM) திட்டத்தின் செயல்பாடுகள், விவசாயிகளுக்கான அடமானக் கடன் (Pledge Loan) வசதி மற்றும் விளைபொருட்களின் தரம் மற்றும் ஈரப்பதத்தை அறியும் டிஜிட்டல் ஈரப்பதமானி (Digital Moisture Meter) பயன்பாடு ஆகியவற்றையும் நேரடியாகப் பார்வையிட்டு தெரிந்துகொண்டனர்.

விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை இடைத்தரகர் களின்றி நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கான சந்தை நடைமுறைகள் மற்றும் அரசின் வேளாண் சந்தைப்படுத்தல் திட்டங்கள் குறித்து மாணவிகளுக்கு இந்தக் கள ஆய்வு பயனுள்ள தாக அமைந்தது. இதன் மூலம் வேளாண் விளைபொருட்களின் சந்தைப்படுத்தல், விலை நிர்ணயம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் செயல்பாடுகள் குறித்து மாணவிகள் பல்வேறு புதிய தகவல்களைக் கற்றுக்கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# தேனீ வளர்ப்பு பயிற்சி நடந்தது



மதுரை, நவ.10

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 10/11/26இல் நடை பெற்ற தேனீ வளர்ப்பு பயிற்சியில் சிவகங்கை, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி யில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம், தேன் எடுக்கும் முறை, தேனீக்களை தாக்கும் பூச்சி நோய்கள் பற்றி விரிவாக எடுத் துரைக்கப்பட்டது. மேலும் கொம்புத்தேனீ மற்றும் கொசுத்தேனீ வளர்ப்பு முறைகள் பற்றிய செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இத்துடன் கொம்புத் தேனீ மற்றும் கொசுத்தேனீகளை வளர்க்கும் முறைகள் மற்றும் தேன் எடுக்கும் செயல்முறை விளக்கமும் வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் கி. சுரேஷ், வழங்கினார்.

மேலும் இப்பயிற்சியில் தேன் பதப்படுத்தும் முறைகள் மற்றும் தேனில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய செயல்முறை விளக்கமானது, முனைவர் கி.ஜோதிலட்சுமி, உணவியல் துறை வழங்கினார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் செயல்முறை விளக்கம் மூலம் பயனடைந்தனர். இப்பயிற்சி நிறைவில் பங்கு பெற்ற விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு பங்கு பெற்றதற் கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

# வீட்டிலேயே நுண்கீரைகள் வளர்ப்பு குறித்த பயிற்சி கிராமப்புற பெண்களுக்கு செயல்விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்!

சிவகங்கை, நவ.10

சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இறுதியாண்டு மாணவிகளான ரா.கனிஷ்க்கா, ஆட்லின் எஸ் ே ஷரோன், ப.சித்ரா வள்ளி, ரா.தேவிகா, மு.ஹரிணி ப்ரியா, ரா.ராஜேஸ்வரி, ம.வினோதா, ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் (Rural Agricultural Work Experience Programme

RAWE) கீழ், நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பணிபுரியும் கிராமப்புறப் பெண்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தைச் (NGO) சேர்ந்த பெண்களுக்கு வீட்டிலேயே நுண் கீரைகள் (Microgreens) வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்விளக்கப் பயிற்சியை வழங்கினர்.



இப்பயிற்சியில், குறைந்த இடவசதி மற்றும் குறைந்த செலவில் வீட்டிலேயே நுண்கீரைகளை எளிய முறையில் வளர்க்கும் வழிமுறைகள் குறித்து மாணவிகள் தெளிவாக எடுத்துரைத்தனர். மேலும், நுண்கீரைகள் வளர்ப்பதற்குத் தேவையான விதைகள், வளர்ப்பு முறை, பயன்படுத்த வேண்டிய பொருட்கள், பராமரிப்பு முறைகள் மற்றும் அறுவடை செய்யும் வழிமுறைகள் குறித்தும் செயல்விளக்கம் அளித்தனர்.

நுண்கீரைகளில் உள்ள ஊட்டச்சத்துக்கள், அவற்றின் ஆரோக்கிய நன்மைகள், அன்றாட உணவில் அவற்றைச் சேர்த்துக் கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் தற்போதைய சந்தையில் நுண்கீரைகளுக்கான தேவை, விற்பனை வாய்ப்புகள் மற்றும் அதன் மூலம் பெண்கள் வருமானம் ஈட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் விரிவாக விளக்கினர்.

இப்பயிற்சியில் பங்கேற்ற கிராமப்புறப் பெண்கள், மாணவிகளின் எளிய மற்றும் பயனுள்ள செயல்விளக்கத்தைப் பாராட்டியதுடன், தங்களது வீடுகளிலேயே நுண்கீரைகளை வளர்த்துப் பயன் படுத்துவதாகவும், அதன் மூலம் ஆரோக்கியமான உணவுப் பழக்கத் தையும் கூடுதல் வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொள்வதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

குறைந்த செலவில் நிறைந்த ஊட்டச்சத்து ஒவ்வொரு வீட்டிலும் நுண்கீரை வளர்ப்போம்! என்ற நோக்கத்துடன் நடைபெற்ற இப்பயிற்சி, கிராமப்புறப் பெண்களிடையே புதிய தொழில்நுட்பம் மற்றும் வீட்டுத் தோட்ட ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி!



திருவண்ணாமலை, நவ.10

UMA Institute of Allied Health and Science கல்வி நிறுவனத்தில், பாலாறு வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் சார்பில், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், இயற்கை உரங்களின் பயன்பாடு, பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம் போன்ற இயற்கை இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து விளக்கிக் கூறப்பட்டது. மேலும், இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வேளாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இயற்கை வேளாண்மை தொடர் பான தகவல்களைப் பெற்றனர். இந்நிகழ்ச்சியின் மூலம் இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# முட்டை அமினோ அமிலம் தயாரித்தல் மற்றும் பயன்பாடு குறித்த பயிற்சி & செயல்விளக்கம்!



சேலம், நவ.10

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், சோமம்பட்டியில், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியின் நான்காம் ஆண்டு வேளாண் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் இயற்கை வேளாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கும் முட்டை அமினோ அமிலம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவான பயிற்சி அளிக்கப்பட்டது.

முட்டை அமினோ அமிலம் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள், தயாரிக்கும் முறை, நொதித்தல் செயல்முறை மற்றும் சரியான முறையில் சேமிக்கும் வழிமுறைகள் ஆகியவை செயல்விளக்கத்தின் மூலம் எடுத்துரைக்கப்பட்டன. மேலும், பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல், பூக்கள் மற்றும் காய்களின் வளர்ச்சிக்கு உதவுதல், பயிர்களின் ஊட்டச்சத்து தேவையைப் பூர்த்தி செய்தல் போன்ற இதன் பயன்கள் குறித்தும் விளக்கப்பட்டது.

தொடர்ந்து, முட்டை அமினோ அமிலத்தைப் பயிர்களுக்குச் சரியான அளவில் எவ்வாறு பயன்படுத்துவது, தெளிக்கும் முறை மற்றும் பயன்படுத்த வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியின் மூலம் விவசாயிகள் குறைந்த செலவில் இயற்கை முறையில் பயிர் ஊக்கிகளைத் தயாரித்துப் பயன் படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவைப் பெற்றனர். இந்நிகழ்ச்சி விவசாயிகளிடையே இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது.

# மண் மாதிரி சேகரித்தல் குறித்து விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், நவ.10

RAWE திட்டத்தின் கீழ், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரத்திற்குட்பட்ட பழையங்குடி கிராமத்தில் வேளாண் மாணவர் களால் மண் மாதிரி சேகரிக்கும் பணி மேற் கொள்ளப்பட்டது. இதில் விவசாய நிலங்களில் மண் மாதிரிகள் அறிவியல் முறையில் சேகரிக்கப்பட்டன. மண் மாதிரி சேகரிப்பதற்கு முன்பு நிலத்தின் தன்மை, பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் மற்றும் சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறியப்பட்டது. பின்னர் வயலில் பல்வேறு இடங்களில் ா வடிவில் குழி தோண்டி, குறிப்பிட்ட ஆழத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளில் கற்கள், வேர்கள் மற்றும் பயிர்க் கழிவுகள் நீக்கப்பட்டு, நன்கு கலந்து பரிசோதனைக்காகத் தயார்படுத்தப்பட்டன.

மேலும், மண் பரிசோதனையின் மூலம் மண்ணின் pH, மின் கடத்துத்திறன் (EC), கரிம கார்பன் மற்றும் தழை, மணி, சாம்பல் சத்துக்களின் அளவுகளை அறிந்து கொள்ள முடியும் என்று விளக்கப்பட்டது. மண் பரிசோதனை செய்வதன் அவசியம், மண்ணின் ஊட்டச்சத்து நிலைக்கு ஏற்ப உரமிடுதல், உரச் செலவைக் குறைத்தல், மண் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## சோளப் பயிரில் கருவாட்டு பொறி மூலம் பூச்சி மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி



திருச்சி, நவ.10

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறை எழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின கீழ், சோளப் பயிரில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், அவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் கருவாட்டுப் பொறி (Fish Meal Trap) பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கருவாட்டில் இருந்து வெளிவரும் தனித்துவமான வாசனை, சில வகையான அந்துப்பூச்சிகளைக் கவரும் தன்மை கொண்டது. இப்பொறியின் மூலம் வயலில் காணப்படும் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க முடியும். இந்த முறையானது பூச்சிகளின் தாக்குதலை ஆரம்ப நிலை யிலேயே கண்டறிந்து உரிய மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறது. மேலும், குறைந்த செலவில் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் பூச்சிகளைக் கண்காணிக்க உதவும் எளிய தொழில்நுட்பமாகும். விவசாயிகள் இத்தகைய இயற்கை சார்ந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்றி பயிர் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும் என்று விவசாயிகளுக்கு மாணவிகளால் எடுத்துரைக்கப்பட்டது.



ஜெயின் நாற்றுகள்

சிறந்த மகசூல் - அதிக லாபம்

Jain Seedlings

PAPAYA

பப்பாளி

Rs. 16/-

ஒரு நாற்றின் விலை

போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)



ரெட் லேடி

தைவான் 786

முன்பதிவு செய்வதற்கு

இன்றே அழையுங்கள்:

94425 02396